1982 செப்டம்பர் 10]

காப்பாரப்பட்டியில், இயங்கிவந்த பால் குளிரூட்டும் நிலையம்.

*வினா எண். 44—திரு. இரா. அருணகிரி : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிங்கம்புணரிக்கு அருகிலுள்ள காப்பாரப்பட்டியில் இயங்கி வந்த பால் குளிரூட்டும் நிலையம் செயல்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் அது குறித்து எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) தெரியும்.

(ஆ) இங்கு இயங்கிவந்த பால் குளிரூட்டும் நிலையம் இலாபகரமாக இயங்காததால் அது திருப்பத்தூருக்கு மாற்றப் பட்டுள்ளது.

திரு. இரா. அருணகிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை மீண்டும் செயல்படுத்துவதற்கு அரசு எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று தெரிகிறது. ஆகவே, ஏற்கனவே இருந்த அந்த நிலையத்தை மீண்டும் செயல் படுத்துவதற்கு அரசுக்கு உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, அந்த உத்தேசம் எதுவும் இல்லை.

திரு. மு. அப்பாதுரை: தலைவர் அவர்களே, பால் குளிரூட்டு நிலையங்களின் பொறுப்பில் இருக்கும் இரண்டு அதிகாரிகள் தவிர மற்றபணியாளர்கள் தினக்கூலிகளாக இருப்பதால் பல்வேறு தவறுகளும், முறைகேடுகளும் நடப்பதாக அரசுக்குத் தகவல் வந்து இருக்கிறதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக்கேள்வி சிங்கம்புணரி அருகில் உள்ள நிலயத்தைப் பற்றியதாக இருப்பதால், அதைப் பற்றி விவரம் தெரிந்தால் கேட்கலாம்.

மதுரை மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் ஏலக்காய்.

* வினா எண்: 45—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தற்பொழுது மதுரை மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் ஏலக்காயின் அளவு என்ன?

(ஆ) அதன் மூலம் நம் மாநில அரசுக்கு ஆண்டுக்கு வருவாய் எவ்வளவு கிடைக்கிறது?